# திருப்பூர் மாநகராட்சி

2020 ஜனவரி மாதம் 07-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

## எண். 811 முதல்834

2020 ஜனவரி மாதம் 27-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

## எண். 835 முதல்847

## திருப்பூர் மாநகராட்சி

**2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**811)** திருப்பூர் மாநகராட்சி நான்கு மண்டலங்களுக்குட்பட்ட ஏலம் போகாத கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி 12-12-2019 அன்று நடைபெற்று. அதில் வைப்புத்தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. மண்டலம் எண்.1,3,4-க்குட்பட்ட மண்டலங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மண்டலம்-2ல் உள்ள கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ள விபரம் கீழ்க்காணும் விபரப்படி உள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்களின் பெயர் | மறு மதிப்பீட்டு மாத வாடகை தொகை ரூ. | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் | ஏலம் டெண்டர் கோரிய தொகை ரூ. | வைப்பபுத் தொகை செலுத்திய விபரம் ரூ. |
|---|---|---|---|---|---|
| | **மண்டலம்-II** | | | | |
| 1) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.4 | - | திரு.ஆர்.செரிபா (டெண்டர்) | 2100/- | 25000/- (செ.சீ.எண். 3917/02-12-2019) |
| 2) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.6 | - | திரு.ஆர்.செரிபா (டெண்டர்) | 2100/- | 25000/- (செ.சீ.எண். 3998/02-12-2019) |
| 3) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.8 | - | திரு.பி.ரவி (டெண்டர்) | 2110/- | 10000/- (செ.சீ.எண். 4105/06-12-2019) |
| 4) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.9 | - | திரு.பி.ரவி (டெண்டர்) | 2120/- | 10000/- (செ.சீ.எண். 4104/06-12-2019) |
| 5) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.10 | - | திரு.பி.ரவி (டெண்டர்) | 2130/- | 10000/- (செ.சீ.எண். 4106/06-12-2019) |
| 6) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.11 | - | திரு.வி.வீரக்குமார் (டெண்டர்) | 2500/- | 10000/- (செ.சீ.எண். 4100/06-12-2019) |
| 7) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.12 | - | திரு.வி.வீரக்குமார் (டெண்டர்) | 2500/- | 10000/- (செ.சீ.எண். 4101/06-12-2019) |
| 8) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.13 | - | திரு.வி.வீரக்குமார் (டெண்டர்) | 2500/- | 10000/- (செ.சீ.எண். 4099/06-12-2019) |
| 9) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.15 | - | திரு.எஸ்.நாகராஜ் (டெண்டர்) | 2500/- | 10000/- (செ.சீ.எண். 4102/06-12-2019) |
| 10) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.17 | - | திரு.வி.வீரபாண்டியன் | 2100/- | 25000/- (செ.சீ.எண். 4196/06-12-2019) |

| வ. எண் | குத்தகை இனங்களின் பெயர் | மறு மதிப்பீட்டு மாத வாடகை தொகை ரூ. | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் | ஏலம் டெண்டர் கோரிய தொகை ரூ. | வைப்பபுத் தொகை செலுத்திய விபரம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 11) | புதிய பேருந்து நிலைய முதல் மாடி கடை எண்.39 | - | திரு.டி.ஏழுமலை | 2300/- | 25000/- (செ.சீ.எண். 4197/06-12-2019) |
| 12) | புதிய பேருந்து நிலைய தரைதள கடை எண்.24 | - | திரு.ஆர்.அன்சாரி | 5001/- | 50000/- (செ.சீ.எண். 3999/06-12-2019) |
| 13) | புதிய பேருந்து நிலைய தரைதள கடை எண்.25 | - | திரு.ஆர்.அன்சாரி | 5001/- | 50000/- (செ.சீ.எண். 4000/06-12-2019) |
| 14) | புதிய பேருந்து நிலைய தரை தள கடை எண்.26 | - | திரு.பி.ரவி | 4210/- | 25000/- (செ.சீ.எண். 4103/06-12-2019) |
| 15) | புதிய பேருந்து நிலைய மேற்குபுறம் உள்ள உணவு விடுதி | - | திருமதி.எஸ்.அர்ச்சனா | 16000/- | 100000/- (செ.சீ.எண். 4098/06-12-2019) |

மேற்காணும் வரிசை எண்.1 முதல் 15 வரை உள்ள கடைகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் ஒன்று தான் என்றாலும் பலமுறை ஏலம் நடத்தப்பட்டும் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. காலியாக நீண்ட நாட்கள் இருப்பதை காட்டிலும், பெறப்பட்ட தொகைகளுக்கு கடைகளை ஒப்படைத்தால் மாநகராட்சிக்கு கணிசமான வருவாய் வரும் என்பதாலும், தணிக்கையில் கடைகள் ஏலம் போகாமல் உள்ளதால் தடை எழுப்பப்படுவதாலும், மேற்கண்ட கடைகளை பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் அடிப்படையில் மாத வாடகை தொகைக்கு கோரப்பட்டு உள்ளவர்களுக்கு கடையை ஒப்படைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

வரிசை எண்.1 முதல் 15 வரை உள்ள கடைகளை பெறப்பட்ட தொகைகளுக்கு கடைகளை ஒப்படைத்தால் மாநகராட்சிக்கு கணிசமான வருவாய் வரும் என்பதாலும், மேற்கண்ட கடைகளை பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் அடிப்படையில் மாத வாடகைக்கு கோரப்பட்டவர்களுக்கு கடைகளை ஒப்படைக்க அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ.1/6236/2018)

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**812)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் -II க்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் தரைதள கடை எண். மற்றும் புதிய பேருந்து நிலைய முதல்தள கடைகளுக்கு மறுமதிப்பீடு தொகைக்கு குறைவாகவும், வைப்புத் தொகை குறைத்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 03-12-2019 மற்றும் 12-12-2019-ந் தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ள விபரம் கீழ்க்காணும் விபரப்படி பெறப்பட்டது.

| வ. எண் | குத்தகை இனங்களின் பெயர் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் | ஏலம் டெண்டர் கோரிய தொகை ரூ. | வைப்பபுத் தொகை செலுத்திய விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| I | **மண்டலம்-II** | | | |
| 1) | புதிய பேருந்து நிலைய முதல் தரைதள கடை எண்.23 | திருமதி.பி.சுமதி (டெண்டர்) | 3610/- | 15000/- (செ.சீ.எண். 262214/26-11-2019) |

| வ. எண் | குத்தகை இனங்களின் பெயர் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் | ஏலம் டெண்டர் கோரிய தொகை ரூ. | வைப்புத் தொகை செலுத்திய விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 2) | புதிய பேருந்து நிலைய முதல் தரைதள கடை எண்.33 | திருமதி.பி.சுமதி (டெண்டர்) | 3500/- | 15000/- (செ.சீ.எண். 262215/26-11-2019) |
| 3) | புதிய பேருந்து நிலைய முதல் தரைதள கடை எண்.14 | திரு.முத்துக்குமார் (டெண்டர்) | 3001/- | 25000/- (செ.சீ.எண். 0003838/28-11-2019) |
| 4) | புதிய பேருந்து நிலைய முதல் தரைதள கடை எண்.18 | திரு.குமார் (டெண்டர்) | 2501/- | 25000/- (செ.சீ.எண். 0003975/02-12-2019) |
| 5) | புதிய பேருந்து நிலைய முதல் தரைதள கடை எண்.19 | திரு.குமார் (டெண்டர்) | 2501/- | 25000/- (செ.சீ.எண். 0003977/02-12-2019) |
| 6) | புதிய பேருந்து நிலைய முதல் தரைதள கடை எண்.20 | திரு.குமார் (டெண்டர்) | 2500/- | 25000/- (செ.சீ.எண். 0003976/02-12-2019) |
| 7) | புதிய பேருந்து நிலைய முதல் தரைதள கடை எண்.21 | திரு.குமார் (டெண்டர்) | 2503/- | 25000/- (செ.சீ.எண். 0003974/02-12-2019) |
| 8) | புதிய பேருந்து நிலைய முதல் தரைதள கடை எண்.38 | திருமதி.பி.சுமதி (டெண்டர்) | 2100/- | 10000/-(செ.சீ.எண். 4099/06-12-2019) |

மேற்காணும் வரிசை எண்.1 முதல் 8 வரை உள்ள கடைகள் நீண்ட நாட்களாக ஏலம் போகாமல் மறு மதிப்பீடு தொகைக்கு யாரும் ஏலம் கோராமல் நீண்ட நாட்களாக காலியாக இருந்தது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் ஆய்வின் போது அனைத்து கடைகளையும் குத்தகைதாரருக்கு ஒப்படைக்க வேண்டும் என உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும் காலியாக நீண்ட நாட்கள் இருப்பதால், பெறப்பட்ட தொகைகளுக்கு கடைகளை ஒப்படைத்து மாநகராட்சிக்கு கணிசமான வருவாய் வரும் என்பதாலும், தணிக்கையில் கடைகள் ஏலம் போகாமல் உள்ளதால் தடை எழுப்பப்படுவதாலும், மேற்கண்ட கடைகளை பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாத வாடகை தொகைக்கு ஒப்படைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

வரிசை எண்.1 முதல் 8 வரை உள்ள கடைகளை பெறப்பட்ட தொகைகளுக்கு கடைகளை ஒப்படைத்தால் மாநகராட்சிக்கு கணிசமான வருவாய் வரும் என்பதாலும், மேற்கண்ட கடைகளை பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் மாத வாடகைக்கு கோரப்பட்டவர்களுக்கு கடைகளை ஒப்படைக்க அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.அ.1/6236/2018)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**813)**திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 1க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN 39 BE 6531 ஐ டிப்பர் வாகனமாக வகை மாற்றவும் (ம) TN 39 BE 6549 வாகனத்தை கழிவுநீர் அகற்றும் வாகனமாக மாற்றுவதற்கும் 05.08.2019ம் தேதியில் ஆணையர் / தனிஅலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஆதார விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளபடி வரப்பெற்றுள்ளது.

**813-ன் தொடர்ச்சி**

| வ. எண் | வாகனம் எண் | நிறுவனத்தின் விபரம் | மாற்றம் செய்யப்படும் வகை | விலைப்புள்ளி |
|---|---|---|---|---|
| 1. | TN 39 BE 6531 | M/s. Sri Jothimurugan Motor Works, Salem-636007 | டிப்பர் | ரூ.6,39,300/- |
| | | M/s. Lakshmi Auto Diesel Works, Metturdam-636401 | | ரூ.6,91,950/- |
| 2. | TN 39 BE 6549 | M/s. Sri Jothimurugan Motor Works, Salem-636007 | கழிவுநீர் அகற்றும் வாகனம் | ரூ.13,56,300/- |
| | | M/s. Lakshmi Auto Diesel Works, Metturdam-636401 | | ரூ.14,24,250/- |

மேற்படி விலைப்புள்ளிகளில் இரண்டு வாகனங்களுக்கும் M/s. Sri Jothimurugan Motor Works, Salem-636007. என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியானது குறைந்த விலைப்புள்ளியாக இருப்பதால் அதனை ஆதார விலைப்புள்ளியாக TN 39 BE 6531 வாகனத்தை டிப்பர் வாகனமாக மாற்றம் செய்ய ரூ.6,40,000/- மற்றும் TN 39 BE 6549 வாகனத்தை கழிவுநீர் அகற்றும் வாகனமாக மாற்றம் செய்ய ரூ.13,60,000/-ஐ ஆதார விலையாக ஏற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை மேற்கொள்ளவும் நாளிதழில் பிரசுரம் செலவு உத்தேசமாக ரூ.2.00இலட்சம் இதற்கான நிர்வாக அனுமதி மற்றும் உத்தேச செலவீனம் ரூ.22.00இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். **(H1/4952/2019)**

-----

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

-----

**814)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம் மண்டலம் 1ல் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் TN 42 R 2367 க்கு தகுதி சான்று முடிவடைந்த நிலையில் தகுதி சான்று புதுப்பிக்க அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ABT Industries Limited, பல்லடம், என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி 08.11.2019ம் தேதி ரூ.174864/-க்கு பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வாகனத்தில் பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் அதற்கான செலவீனத்திற்கும் மாநகராட்சி ஆணையர் / தனிஅலுவலர் அவர்கள் .12.2019ந் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வாகனத்தினை பழுது நீக்கம் செய்து தகுதி சான்று புதுப்பிக்க தேவையான பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் இதற்காகும் செலவீனத்திற்க்கும் திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 101 உட்பிரிவு 2(b)ன்படி ஆணையர்அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மேற்கண்ட வாகனத்தின் பழுதுநீக்கும் பணியினை பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ளும் பொருட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். **(H1/4952/2019)**

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**815)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 1க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொதுசுகாதாரப் பிரிவு 12 வாகனங்களுக்கு புதிதாக பேட்டரி மாற்றும் பணிக்கு 20.12.2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வறுமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|
| **1** | M/s.Ideal Solar Solutions, Tiruppur | ரூ.1,32,100/- |
| **2** | M/s.Sun Power Battery, Tiruppur | ரூ.1,31,750/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Sun Power Battery, Tiruppur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள M/s.Sun Power Battery, Tiruppur என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(H1/3239/2019)**

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**816)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண். 4க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN 42 F 0393 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு **20.12.2019** அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|
| 1 | Friends Tyres, Tiruppur-2 | ரூ.133600/- |
| 2 | SMS Tyres, PN Road, Tiruppur-2 | ரூ.134900/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர். Friends Tyres, Tiruppur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். Friends Tyres, Tiruppur என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்0.0புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(H1/6747/2019)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**817)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 2க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN 39 AR 0060 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு **20.12.2019** அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|
| 1 | Best Motors Works, Naripallam Road, Odanthurai, Mettupalayam-641301 | ரூ.175600/- |
| 2 | Mettupalayam Auto Service Center, Raja Nagar, Poyampalayam, PN Road, Tiruppur-641602 | ரூ.172450/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர். **Mettupalayam Auto Service Center** Tiruppur. என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். **Mettupalayam Auto Service Center** Tiruppur என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். **(H1/6638/2019)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**818)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 2க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN 39 BE 1362 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு **20.12.2019** அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|
| 1 | Best Motors Works, Naripallam Road, Odanthurai, Mettupalayam-641301 | ரூ.72300/- |
| 2 | Mettupalayam Auto Service Center, Raja Nagar, Poyampalayam, PN Road, Tiruppur-641602 | ரூ.68650/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர். **Mettupalayam Auto Service Center** Tiruppur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். **Mettupalayam Auto Service Center** Tiruppur என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். **(H1/5247/2019)**

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**819)** திருப்பூர் மாநகராட்சி பகுதியில் விடுபட்டுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்ற அரசாணை எண்.50 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 21.05.2018, ரூ.525.92 இலட்சங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. அதன் ஒரு பகுதியாக ஒரு நாளைக்கு 36 மில்லியன் லிட்டர் அளவிற்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், சர்க்கார் பெரியபாளையத்தில் அமைக்க மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒரு நாளைக்கு 30 மில்லியன் லிட்டர் அளவிற்கு கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யும் வசதிகள் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு திட்டம் மூலம் 2005ம் ஆண்டு அக்ரஹார பெரியபாளையம் மற்றும் சர்க்கார் பெரியபாளையத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான 13.77 ஏக்கர் நிலம் மாநகராட்சியால் புதிய திருப்பூர் மேம்பாட்டு கழகத்தினருக்கு குத்தகை மூலம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலங்கள் அக்ரஹார பெரியபாளையத்தில் 199/1A2 (3.24 ஏக்கர், 199/1C(0.50 ஏக்கர்), 202/1 (2.66 3/4 ஏக்கர்) மற்றும் 205/1A (2.00 ½ ஏக்கர்) ஆகிய எண்களையும் சர்க்கார் பெரியபாளையத்தில் புல.எண். 200/2 (5.36 ஏக்கர்)ம் கொண்டுள்ளது. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு திட்ட கழகத்தினரால் பயன்படுத்தப்படாமல் சுமார் 3.5 ஏக்கர் நிலம் புல எண்.200/2ல் காலியாக உள்ளது. எனவே 200/2 சர்க்கார் பெரியபாளையத்தில் காலியாக உள்ள சுமார் 3.5 ஏக்கர் ஒப்படைக்கப்பட்ட குத்தகை நிலத்தை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு திட்ட கழகத்தினரிடம் திரும்ப பெற்று 36 MLD STP கட்ட பயன்படுத்தித் கொள்ளலாம். இது தொடர்பான கருத்துருவை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு திட்ட கழகத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெறவும், காலியாக உள்ள நிலத்தை மாநகராட்சி நிலமாக கருதி 36 MLD கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிகளை மேற்கொள்ள அனுமதி வேண்டி மாசுகட்டுப்பாட்டு வாரியத்திடம் விண்ணப்பிக்கவும் மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. சர்க்கார் பெரியபாளையம் கிராமத்தில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு திட்ட கழகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட புல எண். 200/2ல் பகுதி பயன்படுத்தபடாமல் உள்ள 3.5 ஏக்கர் காலி நிலத்தை திரும்பபெற புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு திட்ட கழகத்திற்கு கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. புல எண். 200/2ல் பகுதி (3.5 ஏக்கர்) காலியாக உள்ள நிலத்தில் மாநகராட்சி மூலம் 36 MLD STP கட்ட அனுமதி வழங்கவேண்டி தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு விண்ணப்பிக்க மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**(E1/4813/2017/IV)**

-------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**820)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 56ல் உள்ள கே.வி.ஆர் நகர் மாநகராட்சி உயர்நிலை பள்ளியில் உள்ள கழிப்பிடம் 2004ஆம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. மேற்கண்ட கழிப்பிடம் கட்டி 15 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. மேற்படி கழிப்பிடத்தின் கூரை மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேற்படி கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் பள்ளிக் குழந்தைகள் தற்பொழுது பயன்படுத்துவதில்லை. புதிதாக கட்டப்பட்ட கழிப்பிடம் மாணவ மாணவியர்களுக்கு போதுமானதாக உள்ளது. மேலும் இந்த கழிப்பிடம் மீண்டும் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலாத நிலையில்

**820-ன் தொடர்ச்சி**

உள்ளது. எனவே பழுதடைந்து மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள இந்த கழிப்பிடத்தினை பொது ஏலம் கோரி இடித்து அகற்றி அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்.
2. பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற மேற்படி மிகவும் பழுதடைந்த மோட்டார் அறையினை இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் கோரி மேல்நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**(1879/C1/Z4/2019)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**821)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 56ல் உள்ள பாரப்பாளையம் பகுதியில் உள்ள கழிப்பிடம் 2004ஆம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. மேற்கண்ட கழிப்பிடம் கட்டி 15 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இந்த கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து தற்பொழுது பயன்பாட்டில் இல்லை. மேற்படி கழிப்பிடத்தின் கூரை மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேலும் இந்த கழிப்பிடம் மீண்டும் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்து மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள இந்த கழிப்பிடத்தினை பொது ஏலம் கோரி இடித்து அகற்றி அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்
2. பொது மக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி மிகவும் பழுதடைந்த கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் கோரி மேல்நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். **(4877/E1/Z4/2019)**

-------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-------

**822)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 55ல் உள்ள சுண்டமேடு பகுதியில் உள்ள கழிப்பிடம் 2006ஆம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. மேற்கண்ட கழிப்பிடம் கட்டி 13 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. மேற்படி கழிப்பிடத்தின் கூரை மிகவும் சேதமடைந்த இடிந்து விழும் நிலையில் உள்ளது. இந்த கழிப்பிடம் மீண்டும் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது. மேலும் இக்கழிப்பிடம் தற்பொழுது பயன்பாட்டில் இல்லை. மேற்படி கழிப்பிடத்தின் அருகில் திருப்பூர் தெற்கு ரோட்டரி சங்கம் அமைப்பிலிருந்து புதிதாக கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே பழுதடைந்து மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள இந்த கழிப்பிடத்தினை பொது ஏலம் கோரி இடித்து அகற்றி அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**822-ன் தொடர்ச்சி**

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்
2. பொது மக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி மிகவும் பழுதடைந்த கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் கோரி மேல்நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**(248/2019/E1-IV)**

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**

-----

**823)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 3, வார்டு எண் 45ல் உள்ள பழைய பேருந்து நிலையத்தில் ஏற்கனவே தென்புறம் உள்ள ஆர்.சி.சி கூரை கட்டிடம் 1986-ல் கட்டி முடிக்கப்பட்டது (கட்டிடம் கட்டி 34 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது) கிழபுறம் உள்ள ஆர்.சி.சி கூரை கட்டிடம் 1995-ல் கட்டி முடிக்கப்பட்டது (கட்டிடம் கட்டி 25 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது), வடபுறம் உள்ள சிமெண்ட் கூரை கட்டிடம் கட்டி 50 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது, மேலும் 5 எண்ணிக்கை பொதுகழிப்பிடங்கள் மற்றும் 2 எண்ணிக்கை பயணியர் நிழற்குடை கட்டி 10 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. மேற்படி பழைய பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் குறைப்பதற்கு ஸ்மார்ட் சிட்டி (2018-19) திட்டத்தின் கீழ் பழைய கட்டிங்களை இடித்தகற்றி புதிய பொழிவுடன் பேருந்து நிலையம் 4வது சீர்மிகு நகரம் உயர்மட்ட திட்ட ஒப்புதல்குழு பரிந்துரை நாள் 14.08.2018 அன்று கட்டிடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாமன்ற தீர்மான எண் 805 நாள் 30-12-2019ல் மாநகராட்சிக்கு சொந்தமான பழைய கட்டிங்களை **E-Auction** முறையில் இடித்து அகற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பழைய பேருந்து நிலையத்திலுள்ள பழைய கட்டிடங்களை M/s.MSTC Ltd., சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் E-Auction முறையில் இடித்து அகற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

**(Z4/E1/163/2020)**

-----

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது**

-----

**824)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 55ல் உள்ள சுண்டமேடு பகுதியில் மாநகராட்சி பள்ளியில் உள்ள பழுதடைந்துள்ள ஓட்டுக் கட்டிடம் 1982-ஆம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. மேற்கண்ட ஓட்டுக்கட்டிடம் 37 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. மேற்படி கட்டிடம் பல இடங்களில் விரிசல் ஏற்பட்டு மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் மீண்டும் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்துள்ள மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள இந்த ஓட்டுக் கட்டிடத்தினை பொது ஏலம் கோரி இடித்து அகற்றி அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>824-ன் தொடர்ச்சி</u>**

**அலுவலகக் குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்
2. பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி மிகவும் பழுதடைந்த ஓட்டுக் கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் கோரி மேல்நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**

--------

**825)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 58ல் உள்ள இடுவம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள சமையல் கூடங்கள் 2004ஆம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. மேற்கண்ட சமையல் கூடங்கள் கட்டி 15 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. மேற்படி சமையல் கூடங்களின் கூரை மற்றும் சுவர்கள் அருகில் உள்ள மரத்தின் வேரினால் மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேற்படி சமையல் கூடங்கள் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் பள்ளிக் குழந்தைகள் தற்பொழுது பயன்படுத்துவதில்லை. பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக சமையல் கூடம் கட்டப்பட உள்ளது. மேலும் இந்த சமையல் கூடங்கள் மீண்டும் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்துள்ள மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள இந்த சமையல் கூடங்கள் பொது ஏலம் கோரி இடித்து அகற்றி அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்
2. பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி மிகவும் பழுதடைந்த சமையல் கூடங்கள் இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் கோரி மேல்நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**

-------

**826)** திருப்பூர் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.17573/2018/IHSDP-3-2 நாள்.18/12/2018 நிர்வாக அனுமதி வார்டு எண்.60 எஸ்.ஆர் நகர் வடக்கு பகுதியில் 5TPD கொள்திறன் கொண்ட நுண் உரக் கிடங்கு (Micro Composting Centre) அமைத்தல் மதிப்பீட்டுத் தொகை ரூ.80.00 இலட்சம் பணிக்கு 04/02/2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி 08/02/2019 அன்று பணி உத்திரவு ஒப்பந்ததாரர் திருவாளர்.செந்தில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் Site Clearance பணி செய்து 20/10/2018 அன்று மண் தோண்டுதல் பணி மேற்கொள்ளும் பொழுது மேற்படி இடத்தில் நுண் உரக் கிடங்கு அமைத்தால் துர்நாற்றம் வீசும் என எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல் செய்து பொதுமக்கள் பணியை செய்ய விடாமல் தடுத்து நிறுத்திவிட்டார்கள்-துர்நாற்றம் வீசாது என எடுத்துக்கூறியும் ஒப்புக் கொள்ளவில்லை. பணியின் அவசர அவசியம் கருதி, ஸ்மார்ட் சிட்டி பணியினை உடனடியாக செய்து

**826-ன் தொடர்ச்சி**

முடிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பணி முடிவறிக்கை சமர்பிக்க வேண்டியுள்ளது. வார்டு எண்.60க்கு பதிலாக வார்டு எண்.55 சுன்டமேடு, செல்வலட்சுமி நகர் பகுதியில் ஏற்கனவே பாறைகுழியாக இருந்து குப்பைகளால் மூடப்பட்ட இடத்தில் 5TPD கொள்திறன் கொண்ட நுண் உரக் கிடங்கு இடம் மாற்றி பணியை மேற்கொள்ளலாம். மேலும் இப்பணிக்கு ஒப்பந்ததாரர் திருவாளர்.செந்தில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்கள் வழங்கியுள்ள விலை விகிதத்திலேயே மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**(168/S2018-19)**

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**827)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும் குடிசை பகுதிகளிலும் அவ்வப்போது குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கும் வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகரில் அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் முடிவடையும் வரையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் தேவைப்படுவதால் 01/12/2018ம் தேதி முதல் ஒராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 26-11-2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அப்புசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்திரவு 30/11/2018ம் தேதி வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. பணி உத்திரவு காலம் 31/12/2019ம் தேதியுடன் முடிவடைவதாலும், வாகனங்களில் ஜி.பிஎஸ் கருவி பொருத்த அறிவுறுத்தி உள்ளதாலும். ஒப்பந்தம் கோர கால அவகாசம் தேவைப்படுவதால் ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகிதத்தில் அதே ஒப்பந்தத்தில் மீண்டும் ஒரு மாத காலத்திற்கு 01-01-2020 முதல் 31-01-2020 வரை குடிநீர் விநியோகம் லாரிகள் மூலம் செய்யவும், ஒரு மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.17.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

-----

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

-----

**828)** திருப்பூர் மாநகராட்சி வார்டு எண் 45 முத்துப்புதூர் பள்ளி வளாகம் பழைய பேருந்து நிலையம் அருகே இயங்கி வந்ததை மாற்றம் செய்ய நகராட்சி இயக்குநர், சென்னை அவர்கள் R.O.C No: 17573 /2018 / IHSDP -3, நாள்: 19.12.2019ல் அனுமதி அளித்ததை தொடர்ந்து மேற்கண்ட பள்ளி வளாகம் புதிதாக ஆண்டிக்காடு பகுதியில் உள்ள பிறப்பு, இறப்பு சான்றிதழ் பதிவு செய்யும் பகுதியில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே ஏற்கனவே இயங்கி வந்த பழைய பேருந்து நிலையம்

**828-ன் தொடர்ச்சி**

அருகில் உள்ள முத்துப்புதூர் பள்ளி வளாகத்தில் உள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் அதன் பின்புறம் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகம், Labour office. Ward Office. Two Wheeler Stand கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த ஊராட்சி நன்னடத்தை விதிகள் 02-01-2020 வரை நடைமுறையில் இருந்ததால் அந்தப்பகுதியில் SMART CITY MISSION திட்டத்தில் புதிதாக கட்டப்படவுள்ள அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம் பணி மேற்கொள்ள கட்டிடங்கள் இடிக்கும் பணியை Section 15-ல் மேற்கொள்வதை மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் ஏற்கலாம். **(E1/6630(V)/2019)**

------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

------

**829)** திருப்பூர் மாநகராட்சி வார்டு எண் 45 பழைய பேருந்து நிலையத்தின் அருகே உள்ள முத்துப்புதூர் பள்ளி வளாகம் மற்றும் மாநகராட்சி கட்டிடங்களை உள்ளடக்கி கட்டப்படவுள்ள அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம் பணிக்காக முத்துப்புதூர் பள்ளியினை பள்ளிக்கு அருகில் இருக்கும் ஆண்டிக்காடு பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்கும் வளாகத்தில் ஏற்கனவே உள்ள கட்டிடம், புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு தகுதிச் சான்றிதழ் பெற்று மாற்றம் செய்யலாம் என முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் கடித எண்.17830 / MC6 / 2019, நாள் 14-11-2019-ல் தெரிவித்துள்ளது. அதன்படி மேற்கண்ட வளாகத்தில் உள்ள கட்டிடங்களில் அங்கன்வாடி கட்டிடம், பொது விநியோகக் கடை போன்ற கட்டிடங்களை தவிர்த்து பிரதான கட்டிடம், தென்புறம் உள்ள ஒரு அறை மற்றும் புதிதாக கட்டிடங்கள் போன்றவற்றிற்கு தகுதிச் சான்றிதழ் மாநகராட்சி பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்டதை ஏற்று நகராட்சி இயக்குநர், சென்னை அவர்கள் R.O.C.NO. 17573 / 2018 / IHSDP - 3 நாள் 19-12-2019-ல் முத்துப்புதூர் பள்ளி வளாகத்தினை அதனருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்கும் வளாகத்திற்கு மாற்றி இயங்க அனுமதி அளித்ததன்படி பள்ளி வளாகத்தினை மாற்றி அமைக்கவும், அதே வளாகத்தில் உள்ள தகுதியற்ற கட்டிடங்களான அங்கன்வாடி ( 6.56 x 6.96 = 45.66m$^2$ )மற்றும் பொதுவிநியோகக் கடை (3.45 x6.96=24.01m$^2$ ) கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவும், ஏற்கனவே இயங்கி வந்த முத்துப்புதூர் பள்ளியை மாற்றி அமைக்க உள்ளதால் அந்த முத்துப்புதூர் பழைய பள்ளி கட்டிடத்தையும் ( (Block A & B 2 x 31.05 x 7.70 = 478.17m$^2$, Kitchen = 3.76 x 3.46 = 13.01m$^2$ ),மதிய உணவகம் (5.22 x 5.19 = 27.09 m $^2$), Store Room ( 3.51 x 2.91 = 10.21m$^2$ ) Toilet ( 6.79 x 4.34 = 29.47 m$^2$ ). அதன் பின்புறம் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகம் ( Hall & Kitchen 16.61 x 10.95 = 181.88 m$^2$ Waiting Area 12.30 x 4.86 = 59.78 m$^2$ , Counter 3.21 x 1.95 =6.26m$^2$ ), Labour Office ( 15.50 x 6.42 = 99.51 m$^2$) Ward Office (11.54 x 10.39 = 119.90m$^2$, Toilet-1 = 2.10 x 1.96 = 4.12m$^2$ , Toilet-2 = 3.34 x 2.12 = 7.08m$^2$ ), Two Wheeler Stand தரைதளம் மற்றும் முதல்தளம் கூடிய ( 22.25 x 14.95 = 332.64m$^2$ அளவுள்ள அதனுடன் Ramp மற்றும் படி 15.82 x 4.12 = 65.18m$^2$ ) போன்ற கட்டிடங்களையும் இடித்து அப்புறப்படுத்தவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மாமன்றம் ஏற்கலாம். **(E1/6630(V)/2019)**

---------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-------

**830)** திருப்பூர் மாநகராட்சியில் மிடுக்கான நகரம் (Smart City Mission) திட்டத்தின் கீழ் டவுன் ஹால் வளாகத்தில் மாநாட்டு மையம் (Convention Centre) கட்டுதல் பணிக்கு இடையூறாக உள்ள 38 எண்ணிக்கையிலான மரங்களை அப்புறப்படுத்த வருவாய் கோட்டாட்சியர், திருப்பூர் அவர்களின் அனுமதி கடிதம் பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மரங்களை பொது ஏலத்தில் விட்டு அப்புறப்படுத்தவும், வெட்டப்படும் மரங்களுக்கு ஈடாக இருமடங்கு மரக்கன்றுகள் நட்டு பராமரித்து வரவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி தொடரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். **(E1/6630(VII)/2017)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-------

**831)** திருப்பூர் மாநகராட்சியில் மிடுக்கான நகரம் (Smart City Mission) திட்டத்தின் கீழ் டவுன் ஹால் வளாகத்தில் மாநாட்டு மையம் (Convention Centre) கட்டுதல் பணிக்கு இடையூறாக உள்ள 38 எண்ணிக்கை மரங்களை வெட்டி அப்புறப்படுத்த மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களிடம் 30.10.2019 அன்று ஒப்புதல் பெறப்பட்டு 11.11.2019 அன்று காலை 11.00 மணியளவில் பொது ஏலம் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட 8 நபர்களில் திரு.M.கோபி, த/பெ,முனியான்டி, 9/6, SNVS லே அவுட் முதல் வீதி, கொங்கு மெயின் ரோடு, திருப்பூர் அவர்கள் ரூ.34,200/- அதிகபட்ச ஏலக் கேள்வி கோரியுள்ளார். இத்தொகை உள்ளூர் சந்தை நிலவரப்படி உள்ளது. இவர் GST வரி 18% ரூ.6,156/- சேர்த்து மொத்தம் ரூ.40,356/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். மேற்கண்ட ஏலக் கேள்வி தொகையை உறுதி செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி தொடரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். **(E1/6630(VII)/2017)**

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-------

**832)** திருப்பூர் மாநகராட்சியில் மிடுக்கான நகரம் (Smart City Mission) திட்டத்தின் கீழ் வாகனம் நிறுத்தம் இடம் MLCP பணிக்கை முத்துபுதூர் பள்ளி வளாகத்தில் உள்ள 18 எண்ணிக்கையான மரங்களை வெட்டி அப்புறப்படுத்த பொது ஏலம் 24.12.19 அன்று நடைபெற்றது. அதில் 7 நபர்கள் கலந்து கொண்டனர். அதில் அதிகப்படியாக திரு.D. பாலகிருஷ்ணன் S/O துரைராஜ் 6/81,/G2 அமர்ஜோதி கார்டன் நல்லுர் - 6 அவர்களால் ரூ. 18,500/- ற்கு கோரப்பட்டது. எனவே GST 3330/-டன் சேர்த்து மொத்தம் 21830/-ற்குதொகையை மாநகராட்சி Serverசீரமைப்பு பணி மேற்கொள்வதற்கு கருவூலத்தில் பணம் செலுத்த முடியாததால் ஆணையாளர் திருப்பூர் மாநகராட்சிற்கு காசோலையாகரூ.5000/-ற்கு எண்-621320,ரூ.16830/-ற்கு எண் 621323 ஏலதாரர் செலுத்தி உள்ளார். எனவே அதிக ஏலத்தொகை கோரிய திரு.D.பாலகிருஷ்ணன் S/O துரைராஜ் அவர்களுக்குப் பணி ஆணை வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

-------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

**833)** திருப்பூர் மாநகராட்சியில் மிடுக்கான நகரம் (Smart City Mission) திட்டத்தின் கீழ் பழைய பேருந்து நிலையம் அருகில் அடுக்குமாடி வாகனங்கள் நிறுத்துமிடம் கட்டுதல் பணிக்கு இடையூராக உள்ள 18 எண்ணிக்கையிலான மரங்களை அப்புறப்படுத்த வருவாய் கோட்டாட்சியர், திருப்பூர் அவர்களின் அனுமதி கடிதம் பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மரங்களை பொது ஏலத்தில் விட்டு அப்புறப்படுத்தவும், வெட்டப்படும் மரங்களுக்கு ஈடாக இருமடங்கு மரக்கன்றுகள் நட்டு பராமரித்து வரவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி தொடரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். **(E1/6630(V)/2017)**

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**

-------

**834)** திருப்பூர் மாநகராட்சியில் 2015-16ம் ஆண்டு வரை மேற்கொண்ட பணிகளின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 1% (ம) 5% தொகைகளை திரும்ப வழங்கக் கோரி கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

மேற்படி ஒப்பந்ததாரர்கள் பணி செய்து முடித்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு தொகைகள் காலங்கடந்த வைப்பு தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டு விட்டது. எனவே கீழ்க்கண்ட வைப்பு தொகைகளை திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**திருவாளர்கள்:**

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ரவி | 60000/- |
| 2. | கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன் | 263000/- |
| 3. | சபரி எலக்ட்ரிக்கல்ஸ் & இன்ஜினியரிங் ஸ்டோர் | 17000/- |
| 4. | S. ரஹமத்துல்லா | 557000/- |
| 5. | திருமலை குருசாமி | 77500/- |
| 6. | V.P. அழகையன் | 135000/- |
| 7. | C. ராமசாமி | 100000/- |
| 8. | செந்தில் கன்ஸ்ட்ரக்சன் | 70000/- |

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 9. | R. சிவகுமார் | 35000/- |
| 10. | கவிதா & CO | 86200/- |
| 11. | ஆறுச்சாமி | 50700/- |
| 12. | விஷ்ணு & கோ | 60000/- |
| 13. | C. தேவராஜ் | 120000/- |
| 14. | V.S.M. Construction | 25000/- |
| 15. | R. முத்துச்சாமி | 13000/- |
| 16.. | வெற்றி கன்ஸ்ட்ரக்சன் | 3300000/- |

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். ( பி.5 / 171 / 2016 )

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**

-------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.

. **திருப்பூர் மாநகராட்சி**

**2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**835)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம் மருத்துவ பிரிவின் கீழ் இயங்கி வரும் அவிநாசி கவுண்டன்பாளையம் மருந்தகத்திற்கு தேவைப்படும் மருந்துகளை தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தில் வாங்கிக் கொள்ள அனுமதியும் மற்றும் மருந்துகள் வாங்கிக்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் சென்னை நிறுவனத்தின் மூலம் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.3.00 லட்சத்திற்கு திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008ன் பிரிவு 102 உட்பிரிவு 2(b)ன்படி ஆணையரின் அதிகார வரம்புக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம். **(எச்2/2170/2019)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-------

**836)** திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண் 3,முத்தணம்பாளையம் கிராமம் க.ச.எண். 377/7A1ல் 2.44 ஏக்கர் (9895.00ச.மீ.) பரப்பு இடத்திலுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க 1)திரு.T.சிவக்குமார், த/பெ.ரங்கசாமி கவுண்டர், 2) திரு. தியாகராஜன், த/பெ. N.M.பொன்னுச்சாமி ஆகியோர் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்.

மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கையினை பரிசீலித்து உறுப்பினர் செயலர் (பொ) அவர்கள் கடித ந.க.எண்.570/2019/திஉதிகு நாள் 07.11.2019ல் மனைப்பிரிவு உத்தேச சாலைகள், (ம) பொது உபயோகம் ஆகியவற்றினை உள்ளாட்சிக்கும் - TANGEDCOற்குரிய இடத்தினை மின்வாரியத்திற்கும் தானமாக ஒப்படைப்பு செய்யுமாறு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் அனுப்பியுள்ளார்.

இதற்கேற்ப மனுதாரர்கள் மனைப்பிரிவு சாலைகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் அமைத்துள்ளனர். மேலும் மின் கம்பம் 12 எண்கள் ரூ.25,000/- வீதம் ரூ.3,00,000/-மற்றும் 2.44 ஏக்கருக்கு ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூ.7,500/- வீதம் மாநகராட்சி கருவூலத்தில் நாள் 24.01.2020, சலான் எண்.032/501/5/19-20/0004670,032/501/5/19-20/0004671ல் செலுத்தியுள்ளார்.

எனவே உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தின்படி அமைக்கப்பட்ட மனைப்பிரிவு சாலை இடத்திற்குரிய இடத்தினை பத்திர பதிவு எண்.192/2020 நாள் 31-12-2019 ஆணையாளர் அவர்கள், திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில் தானமாக பதியப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொள்ள மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : ஏற்றுக் கொள்ளலாம் **(இ1/486/2019/ம3)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-------

**837)** மக்கள் தொகை கணக்கெடுப்பு 2020 பணி மேற்கொள்ள பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருப்பூர் மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்கான அறிக்கைகள் உடனுக்குடன் அனுப்ப காலதாமதம் ஏற்படுகிறது எனவே வெளிச்சந்தை முறையில் ஏற்கனவே பொறியாளர் பிரிவில் பணியாளர்களை வழங்கி வரும் விலை விகிதத்தில் 5 புள்ளி விவர குறிப்பாளர்களை மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி முடியும் வரை வழங்க திருவாளர் மாஸ்டர் மைண்டு, திருப்பூர் அவர்கள் தங்களது 24-01-2020 ஆம் தேதிய கடிதத்தில் இசைவு தெரிவித்துள்ளனர். எனவே திருவாளர் மாஸ்டர் மைண்டு, திருப்பூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும், மேலும், இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கும் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

----

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

-------

**838)** திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள அவினாசி ரோடு பகுதியில் 10-எண்ணிக்கையிலான விளம்பர பலகையும், பல்லடம் ரோடு பகுதியில் 10-எண்ணிக்கையிலான விளம்பர பலகையும், தாராபுரம் ரோடு பகுதியில் 10-எண்ணிக்கையிலான விளம்பர பலகையும், காங்கேயம் ரோடு பகுதியில் 5-எண்ணிக்கையிலான விளம்பர பலகையும், பி.என். ரோடு பகுதியில் 10-எண்ணிக்கையிலான விளம்பர பலகையும், மற்றும் ஊத்துக்குளி ரோடு பகுதியில் 5-எண்ணிக்கையிலான விளம்பர பலகையும் பொது மக்களுக்கு தெரியும் வண்ணம் பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்தக்கூடாது என்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பலகைகள் மேற்காணும் பகுதிகளில் நடைப்பாதை ஓரத்தில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படா வண்ணம் அமைத்துக் வர்ணம் பூசி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள திருவாளர்.ராஜ் அட்வர்டைசிங் என்ற நிறுவனத்திடமிருந்து அனுமதி கோரி கடிதம் பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகப்படுத்தக் கூடாது என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பலகைகள் அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மாநகராட்சி சட்ட விதிகளுக்கு உட்பட்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>முக்கிய நிபந்தனைகள்</u>

1) விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் பலகைகளில் எழுதப்படும் விளம்பரங்கள் குறித்து வரைபடங்கள் சமர்ப்பித்து மாநகர செயற் பொறியாளர் அவர்கள் ஒப்புதல் பெற வேண்டும்.
2) காவல் துறையின் அனுமதி மற்றும் சம்மந்தபட்ட துறை அனுமதி பெற்று இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
3) மாநகராட்சி விளம்பர பலகைகள் நிறுவுதல் விதிகளுக்குட்பட்டு, விளம்பர பலகைகள் நிறுவுதல் வேண்டும்.
4) ஆட்சேபகரமான விளம்பரங்கள் அனுமதிக்க இயலாது.
5) மாநகராட்சி வழங்கும் அனுமதியினை எக்காரணம் இன்றி இரத்து செய்யவோ, மறு பரிசீலனை செய்யவோ மாநகராட்சி ஆணையருக்கு உரிமை உண்டு.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். **(இ1/104/2020)**

----

## தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது

-------

**839)** திருப்பூர் மாநகராட்சி, குடிநீர் கட்டண விகிதங்கள் மற்றும் வைப்புத்தொகை, மாமன்ற தீர்மான எண் 1080, நாள் 23.12.2005ன் படி குடிநீர் கட்டணங்கள் 36 வார்டு பகுதிகளில் திருத்தியமைக்கப்பட்டு, கோவை மாவட்ட அரசிதழில் 29/03/2007 அன்று பிரசுரிக்கப்பட்டு 01-04-2005 முதல் மீட்டர் அளவுமானி அளவீட்டின் படி நடைமுறைப்படுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது.

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதி (39 வார்டுகளில்) மாதாந்திர குடிநீர் கட்டண அடிப்படையில், 2011-ம் வருடம் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் நிர்ணயிக்கப்பட்ட கட்டண அடிப்படையிலேயே தற்போது வரை அதே குடிநீர் கட்டணம் அக்குழாய் இணைப்புகளுக்கு மட்டும் வசூலிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

மாநகராட்சிக்கு பெறப்பட்டு வரும் மூன்று குடிநீர்த் திட்டங்களில் முதல் குடிநீர் திட்டம் மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது. மீதமுள்ள இரு குடிநீர்த் திட்டங்களில் இரண்டாவது குடிநீர்த் திட்டம் (பவானி நீர் ஆதாரம்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலும் (TWAD), மூன்றாவது குடிநீர்த் திட்டம் (காவிரி நீர் ஆதாரம்) NTADCL நிறுவனத்தினர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்காண் இரண்டாவது மற்றும் மூன்றாவது குடிநீர் திட்டங்கள் மூலம் மாநகரில் பெறப்படும் குடிநீருக்கான குடிநீர்க் கட்டணங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு, அளவுமானி கட்டண அடிப்படையில் மாதம் ஒருமுறை கேட்பு பட்டியல் தொகை அடிப்படையில் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மாநகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீருக்கு 31.11.2017-ம் தேதி வரை 1 கிலோ லிட்டருக்கு ரூ.4.50 வசூலிக்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அரசாணை எண் 39 நாள் 17.04.2018-ன் படி 01-12-2017 முதல் குடிநீர் கட்டணங்கள் மாற்றப்பட்டு, மாநகராட்சியிடம் திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்களின்படி வசூலிக்கப்பட்டு வருகிறது. விவரம் கீழ்கண்டவாறு.

| வ. எண் | நாள் | குடிநீர் கட்டணம் ரூ/கி.லி | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | 01.12.17 முதல் 31.03.18 வரை | ரூ.9.00 | அரசாணையின்படி வருடத்திற்கு 5% கட்டணங்கள் உயர்த்தி, நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. |
| 2. | 01.04.18 முதல் 31.03.19 வரை | ரூ.9.45 | |
| 3. | 01.04.19 முதல் 31.03.20 வரை | ரூ.9.92 | |
| 4. | 01.04.20 முதல் 31.03.21 வரை | ரூ.10.42 | |

மூன்றாவது குடிநீர்த் திட்டத்தின் நிறுவனத்தின் NTADCL கட்டண விவரங்கள்.
(சலுகை ஒப்பந்தக்கட்டணம்..39.47 எம்.எல்.டி)

| காலம் | ஒரு கிலோவிற்கு விலை |
|---|---|
| 2006 - ஏப்ரல் - 2012 | ரூ.5.00 |
| ஏப்ரல் - 2012 முதல் ஜீன் - 2012 | ரூ.8.71 |
| ஜீலை - 2012 முதல் ஜீன் - 2013 | ரூ.8.72 |
| ஜீலை - 2013 முதல் ஜீன் - 2014 | ரூ.8.29 |
| ஜீலை - 2014 முதல் நவம்பர் - 2014 | ரூ.8.44 |
| டிசம்பர் - 2014 இருந்து | ரூ.10.65 |
| ஏப்ரல் - 2016 இருந்து | ரூ.10.72 |
| ஜீலை - 2016 இருந்து | ரூ.10.89 |
| ஜீலை - 2017 இருந்து | ரூ.11.09 |
| இன்று முதல் | ரூ.11.09 |

**<u>839-ன் தொடர்ச்சி</u>**

ஒப்பந்த சலுவைக்கட்டண அளவிற்கு (39.47 எம்.எல்.டி)க்கு மேல் கூடுதலாக பெறப்படும் குடிநீருக்கான கட்டணம்.

| Period | (Above Allotted Qty) Price Per KL | Govt.Subsidy | Total |
|---|---|---|---|
| 16.03.12 - மார்ச் 13 | Rs.7.50 | Rs.13.50 | Rs.21.00 |
| ஏப்ரல் 13 - மார்ச் 14 | Rs.7.86 | Rs.13.50 | Rs.21.36 |
| ஏப்ரல் 14 - நவம்பர் 14 | Rs.8.24 | Rs.13.50 | Rs.21.74 |
| டிசம்பர் 14 - மார்ச் 15 | Rs.10.45 | Rs.13.50 | Rs.23.95 |
| ஏப்ரல் 15 முதல் | Rs.10.85 | Rs.13.50 | Rs.24.35 |
| ஏப்ரல் 16 முதல் | Rs.11.28 | Rs.13.50 | Rs.24.78 |
| ஏப்ரல் 17 முதல் | Rs.11.74 | Rs.13.50 | Rs.25.24 |
| ஏப்ரல் 18 முதல் | Rs.12.22 | Rs.13.50 | Rs.25.72 |
| ஏப்ரல் 19 முதல் | Rs.12.73 | Rs.13.50 | Rs.26.23 |

மாநகராட்சியில் விதிக்கப்பட்டு தற்போது வசூலிக்கப்படும் வருவாயின் குடிநீர் கட்டண விகிதத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் கட்டண விகிதங்கள் (அரசாணை எண் 39 நாள் 17.04.2018) மற்றும் NTADCL நிறுவனத்தின் திருத்தியமைக்கப்பட்ட குடிநீர்க் கட்டண விகிதங்கள் விலை நிர்ணயக் குழுவின் 26.11.2019 ஆம் தேதிய கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட மேற்காண் கட்டண விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டது. மேற்காண் குடிநீர் கட்டண விகிதங்கள் ஒப்பு நோக்கப்பட்டதில், வருடாந்திர குடிநீர் கட்டண கேட்புத்தொகை மற்றும் செலவினங்கள் கணக்கிடப்பட்டதில் மாநகராட்சிக்கு பெருமளவில் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு.

1) <u>வரவு</u>

அ) சொத்துவரியிலிருந்து குடிநீர் வரி பங்கு 2019-20ம் வருடம் ரூ.11.13 கோடி இதன் அடிப்படையில் 10% உயர்வுடன். .... ரூ. 18.36

ஆ) குடிநீர் கட்டணம் மூலம் எதிர் பார்க்கப்படுவது .... ரூ. 12.40

---------------

மொத்தம் .... ரூ. 30.96

------------

**<u>கோடியில்</u>**

2) <u>செலவு</u>

அ) மின் கட்டணம் .... ரூ. 16.83

ஆ) பணியாளர்கள் ஊதியம் .... ரூ. 3.52

இ) எரிபொருள், ஆயில் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு கெமிக்கல்ஸ் .... ரூ. 1.56

3) பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள் குடிநீர்த் திட்ட ஆண்டு பராமரிப்பு மற்றும் குடிநீர் விநியோக லாரிகளுக்கு வாடகை .... ரூ. 6.00

4) இரண்டாவது மற்றும் மூன்றாவது (NTADCL) குடிநீர்த் திட்டத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணம் .... ரூ.49.95

மொத்தம் செலவினம் ஆண்டிற்கு .... ரூ.77.86

மூன்று குடிநீர்த் திட்டங்களிலும் சேர்த்து ஒரு வருடத்தில் பெறப்படும் மொத்தம் குடிநீரின் அளவு .... ரூ.42340 மில்லியன் லிட்டர்கள்

1000 லிட்டர்களுக்கு செலவு 77.86/42340 X 1000 .... ரூ. 18.38

**<u>839-ன் தொடர்ச்சி</u>**

<u>பற்றாக்குறை</u>

| | | |
|---|---|---|
| ஒரு வருட உத்தேச செலவு | .... ரூ. | 77.86 |
| ஒரு வருட உத்தேச வருமானம் | .... ரூ. | 30.96 |
| கூடுதல் செலவு (பற்றாக்குறை) | .... ரூ. | 46.90 |

மேற்காண் திட்டத்தினை இயக்கி பராமரிக்கும் வகையில் ஏற்படும் பராமரிப்பு செலவினம் மற்றும் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி உதவி பெறுவதால் மேற்காண் நிதியினை திருப்பி செலுத்த நிதி ஆதாரத்தினை சமன் செய்யும் வகையிலும் வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, மாநகராட்சி புதிய குடிநீர் உபவிதிகளில் மற்றும் திருத்தியமைக்கப்படும் உத்தேச கட்டணம் முன்பண விபரங்கள் பின்வருமாறு.

A) <u>உயர்த்தப்படவுள்ள புதிய இணைப்பிற்கான குடிநீர் கட்டண வைப்புத் தொகை</u>

அ) வீட்டுப் பயன்பாடு இணைப்பு ஒன்று

| வரிசை எண் | கட்டிடத்தின் பரப்பளவு (ச.அடி) | நடைமுறைப்படுத்தப்படவுள்ள வைப்புத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 500 வரை | 7,500 |
| 2 | 501 முதல் 1200 | 10,000 |
| 3 | 1201 முதல் 2400 | 12,500 |
| 4 | 2401 க்கு மேல்* | 15,000* |

ஆ) வீட்டு உபயோகம் அல்லாத முறை - வணிக நோக்கு இணைப்பு ஒன்று

| வரிசை எண் | கட்டிடத்தின் பரப்பளவு (ச.அடி) | நடைமுறைப்படுத்தப்படவுள்ள வைப்புத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 500 வரை | 15,000 |
| 2 | 501 முதல் 1200 | 20,000 |
| 3 | 1201 முதல் 2400 | 25,000 |
| 4 | 2401 க்கு மேல்* | 30,000* |

இ) தொழிற்சாலைகள் இணைப்பு ஒன்று

| வரிசை எண் | கட்டிடத்தின் பரப்பளவு (ச.அடி) | நடைமுறைப்படுத்தப்படவுள்ள வைப்புத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 500 வரை | 15,000 |
| 2 | 501 முதல் 1200 | 20,000 |
| 3 | 1201 முதல் 2400 | 25,000 |
| 4 | 2401 க்கு மேல்* | 30,000* |

அடிப்படைத் தொகையான குடிநீர் வைப்புத் தொகையினை கட்டிடத்தின் பரப்பளவு 2,401 சதுர அடிக்கு மேல் உள்ள கட்டிங்களுக்கு அஸ்திவார பகுதி அளவு அதிகரிப்பிற்கு ஏற்ப விகிதாச்சார கணக்கீட்டின்படி கூடுதலாக வசூலிக்கப்பட வேண்டும்.

மேற்காண் குடிநீர் இணைப்பிற்கான வைப்புத் தொகையினை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை 10% கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும்.

**839-ன் தொடர்ச்சி**

B) உயர்த்தப்படவுள்ள குடிநீர்க் கட்டணம்

அ) குடிநீர் வீட்டுப் பயன்பாடு குழாய் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

| வரிசை எண் | கட்டிடத்தின் பரப்பளவு (ச.அடி) | நடைமுறைப்படுத்தப்படவுள்ள மாதாந்திர குடிநீர் கட்டணம் 10,000 லிட்டர் வரை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 500 வரை | 180 |
| 2 | 501 முதல் 1200 | 200 |
| 3 | 1201 முதல் 2400 | 220 |
| 4 | 2401 க்கு மேல்* | 240* |

10,000 லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீர் ஓவ்வொரு 1,000 லிட்டருக்கும் மாதாந்திர கட்டணம் ரூ.15.00.

ஆ) குடிநீர் வீட்டுப் பயன்பாடு அல்லாத இனங்கள் அளவுமானி விகிதம் (Meter rate)

| வரிசை எண் | கட்டிடத்தின் பரப்பளவு (ச.அடி) | நடைமுறைப்படுத்தப்படவுள்ள மாதாந்திர குடிநீர் கட்டணம் 15,000 லிட்டர் வரை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 500 வரை | 540 |
| 2 | 501 முதல் 1200 | 600 |
| 3 | 1201 முதல் 2400 | 660 |
| 4 | 2401 க்கு மேல்* | 720* |

10,000 லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீர் ஓவ்வொரு 1,000 லிட்டருக்கும் மாதாந்திர கட்டணம் ரூ.45.00.

இ) தொழிற்சாலை உபயோகம் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

| வரிசை எண் | கட்டிடத்தின் பரப்பளவு (ச.அடி) | நடைமுறைப்படுத்தப்படவுள்ள மாதாந்திர குடிநீர் கட்டணம் 10,000 லிட்டர் வரை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 500 வரை | 540 |
| 2 | 501 முதல் 1200 | 600 |
| 3 | 1201 முதல் 2400 | 660 |
| 4 | 2401 க்கு மேல்* | 720* |

15,000 லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீர் ஓவ்வொரு 1,000 லிட்டருக்கும் மாதாந்திர கட்டணம் ரூ.45.00

*அடிப்படைத் தொகையான குடிநீர் கட்டணத்தை கட்டிடத்தின் பரப்பளவு 2,401 சதுர அடிக்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு அஸ்திவார பகுதி அளவு அதிகரிப்பிற்கு ஏற்ப விகிதாச்சார கணக்கீட்டின்படி கூடுதலாக வசூலிக்கப்பட வேண்டும்.

இம்மாநகராட்சியுடன் 2011-ல் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கான (குடிநீர் அளவு மானி அல்லாத இணைப்புகள்) பயன்பாட்டு மாதாந்திர கட்டணம் கீழ்கண்டவாறு மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**839-ன் தொடர்ச்சி**

அ) குடிநீர் வீட்டுப் பயன்பாடு குழாய் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

| வரிசை எண் | கட்டிடத்தின் பரப்பளவு (ச.அடி) | நடைமுறைப்படுத்தப்படவுள்ள மாதாந்திர குடிநீர் கட்டணம் 10,000 லிட்டர் வரை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 500 வரை | 180 |
| 2 | 501 முதல் 1200 | 200 |
| 3 | 1201 முதல் 2400 | 220 |
| 4 | 2401 க்கு மேல்* | 240* |

10,000 லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீர் ஓவ்வொரு 1,000 லிட்டருக்கும் மாதாந்திர கட்டணம் ரூ.15.00

ஆ) குடிநீர் வீட்டுப் பயன்பாடு அல்லாத இனங்கள் அளவுமானி விகிதம் (Meter rate)

| வரிசை எண் | கட்டிடத்தின் பரப்பளவு (ச.அடி) | நடைமுறைப்படுத்தப்படவுள்ள மாதாந்திர குடிநீர் கட்டணம் 10,000 லிட்டர் வரை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 500 வரை | 540 |
| 2 | 501 முதல் 1200 | 600 |
| 3 | 1201 முதல் 2400 | 660 |
| 4 | 2401 க்கு மேல்* | 720* |

10,000 லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீர் ஓவ்வொரு 1,000 லிட்டருக்கும் மாதாந்திர கட்டணம் ரூ.45.00.

இ) தொழிற்சாலை உபயோகம் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

| வரிசை எண் | கட்டிடத்தின் பரப்பளவு (ச.அடி) | நடைமுறைப்படுத்தப்படவுள்ள மாதாந்திர குடிநீர் கட்டணம் 10,000 லிட்டர் வரை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 500 வரை | 540 |
| 2 | 501 முதல் 1200 | 600 |
| 3 | 1201 முதல் 2400 | 660 |
| 4 | 2401 க்கு மேல்* | 720* |

15,000 லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீர் ஓவ்வொரு 1,000 லிட்டருக்கும் மாதாந்திர கட்டணம் ரூ.45.00

*அடிப்படைத் தொகையான குடிநீர் கட்டணத்தை கட்டிடத்தின் பரப்பளவு 2,401 சதுர அடிக்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு அஸ்திவார அளவு அதிகரித்தால் விகிதாச்சார கணக்கீட்டின்படி கூடுதலாக வசூலிக்கப்பட வேண்டும்.

மேற்காண் திருத்தியமைக்கப்பட்ட குடிநீர்க் கட்டண விகிதங்களின் படி பெறப்படும் மொத்த வருவாய் 69.64 கோடியாகும். தற்போதைய செலவினம் 77.70 கோடியாகும். குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்குப்பின் மேற்காண் குடிநீர்க் கட்டணங்கள் திருத்தியமைக்கப்படும்.

மேற்காண் குடிநீர் கட்டணங்கள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை 10% கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும்.

**839-ன் தொடர்ச்சி**

மேலும், அரசாணை நிலை எண் 126, 28.11.2018 ஆம் தேதியின் படி குடிநீரிணைப்பு பெறப்படாத கட்டிடங்கள் மற்றும் புதிய கட்டிடங்களுக்கு இணைப்பு மாநகராட்சி மூலம் நீர் அளவுமானியுடன் குழாய் பாதை அமைக்கப்படும். இதற்குரிய கட்டணம் செலவுத் தொகை மற்றும் முன்பணம் ஆகிய இனங்களை பத்து தவணைகளில் சொத்து வரியுடன் சேர்த்து வசூலிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாமன்றம் தனது 442 ஆம் எண்ணிட்ட 08.02.2019 ஆம் தேதிய தீர்மானத்தில் உரிய திருத்தங்கள் செய்து கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மேற்கண்ட திருத்திய குடிநீர் கட்டண விகிதங்கள் மற்றும் வைப்புத் தொகை விகிதங்கள் ஆகிய இனங்களை திருத்தியமைத்துக் கொள்ளவும் குடிநீர் புதிய விதிகளை நடைமுறைப்படுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், சென்னை அவர்களது 13.01.2020ஆம் தேதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் அம்ரூத் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (எ.டி.பி) மற்ற திட்ட வழிகாட்டுதல்களின்படி நடைமுறைப்படுத்திட மாமன்றம் அனுமதி வழங்கலாம்
3) மேற்காண் புதிய குடிநீர் உபவிதிகள் மற்றும் திருத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் முன்பண. விபரங்கள் ஆகியவற்றினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பொது அங்கீகாரம் (General Apperance) கருத்துரு அனுப்பி உரிய நடைமுறை விகிதங்களின்படி நடவடிக்கை மேற்கொண்டு நடைமுறைப்படுத்திட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
4) இத்திட்டம் மத்திய மாநில அரசால் வழங்கப்படும் நிதி ஆதாரங்களின் அடிப்படையிலும், உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(இ1/596/2020)**

----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-------

**840)** திருப்பூர் மாநகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட துணை விதிகள் 14 ஆண்டுகளுக்கும் முன்னதாக திருப்பூர் நகரமன்ற தீர்மானம் எண்-1357 நாள் 31/01/2006ல் இறுதி ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் ந.க.எண்.64310/2005/குவ3 நாள் 06/04/2006ல் இறுதி ஒப்புதல் பெறப்பட்டு உபவிதிகள் கோயமுத்தூர் மாவட்ட அரசிதழில் எண்-14 நாள் 12/05/2006ல் பிரசுரித்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

இக்கட்டண விகிதங்கள் திருப்பூர் நகராட்சியாக இருந்த பொழுது 2006ம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களாகும். இக்கட்டண விகிதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு 14 ஆண்டுகள் ஆகிறது. திருப்பூர் மாநகராட்சியில் தற்போது அம்ரூத் 2017-20ம் ஆண்டு திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை முதற்கட்ட திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. திட்ட செயலாக்க காலம் மூன்று ஆண்டுகளாகும். இத்திட்டத்தில் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட புதிய பகுதியாகவும் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதிகளில் விடுப்பட்ட பகுதிகளுக்கும் பாதாள சாக்கடை திட்டம் அம்ரூத் 11.ன் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**840-ன் தொடர்ச்சி**

கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை மேம்படுத்தவும், புதிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கவும், 2020ம் ஆண்டை அடிப்படை ஆண்டாக கொண்டு ரூ.620.89 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசாணை எண்.50 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 2) துறை நாள் 21.05.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது அதனை தொடர்ந்து அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கடன் மற்றும் மான்யம் பெறுதல்,. ஆசிய வங்கி நிதியுதவி பெறுதல் ஆகியவற்றை கருத்தில் கொண்டும், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிறுவனத்தின் கடிதம் எண். TNUDF/Project/TNUFIP-T2 Tiruppur/WSIS Dated. 13-01-2020 வழங்கப்பட்ட வழிகாட்டுதலின் படியும் தெரிவிதிகப்பட்டுள்ள விபரத்தின்படியும் திட்டத்தினை இயக்கி பராமரிக்கவும், நிதி உதவியினை திரும்ப செலுத்தவும், பாதாள சாக்கடை திட்ட இணைப்பின் மூலம் கிடைக்கப்பெறும் வருவாயை கருத்தில் கொண்டும் புதிய உபவிதிகள், திருத்தப்பட்ட பயன்பாட்டுக் கட்டணம் மற்றும் இணைப்பிற்கான முன்பணம் நிர்ணயிக்கலாம். இத்திட்டத்தினை இயக்கிப் பராமரிக்கவும்,. பெறப்படும் நிதியுதவினை திருப்பிச் செலுத்தும் வகையில் வருவாயை மேம்படுத்தும் நோக்கில் பின்வருமாறு புதிய பயன்பாட்டு கட்டணம் காப்புத் தொகை திருத்திய விதிகளின் படியும் நிர்ணயிக்கலாம்

| சொத்துவரி அடிப்படையில் நிர்ணயம் (சதுர அடியில்) | தற்பொழுது நிர்ணயம் செய்யப்பட உள்ள வைப்புத் தொகை (ரூபாய்) | | | தற்பொழுது நிர்ணயம் செய்யப்பட உள்ள சேவைக்கட்டணம் (ரூபாய்/ மாதம் ஒன்றுக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | வீட்டு பயனுக்கு | வீடல்லாத பயனுக்கு | தொழிற்சாலை பயனுக்கு | வீட்டு பயனுக்கு | வீடல்லாத பயனுக்கு | தொழிற்சாலை பயனுக்கு |
| <500 | 7500 | 15000 | 15000 | 120 | 360 | 360 |
| 501-1200 | 10,000 | 20000 | 20000 | 140 | 420 | 420 |
| 1201-2400 | 12500 | 25000 | 25000 | 160 | 480 | 480 |
| 2401* | 15000 | 30000 | 30000 | 180* | 540* | 540* |
| 2401* சதுர அடிக்கு மேல் உள்ள அடித்தளம் பகுதிக்கான வைப்புத் தொகை மற்றும் கட்டணங்கள் அஸ்திவாரப் பகுதியின் அளவு அதிகரிப்புக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அதிகரிக்கப்படும். | | | | | | |

அரசாணை நிலை எண் 126, 28.11.2018 ஆம் தேதியின் படி குடிநீரிணைப்பு பெறப்படாத கட்டிடங்கள் மற்றும் புதிய கட்டிடங்களுக்கு இணைப்பு மாநகராட்சி மூலம் நீர் அளவுமானியுடன் குழாய் பாதை அமைகக்கப்படும். இதற்குரிய கட்டணம் செலவுத் தொகை மற்றும் முன்பணம் ஆகிய இனங்களை பத்து தவணைகளில் சொத்து வரியுடன் சேர்த்து வசூலிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாமன்றம் தனது 442 ஆம் எண்ணிட்ட 08.02.2019 ஆம் தேதிய தீர்மானத்தில் உரிய திருத்தங்கள் செய்து கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போதுள்ள பாதாள சாக்கடை இணைப்புகளில் முன்பணத் தொகை (புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம்) ஏதேனும் நிலுவைத்தொகை இருப்பின் அத்தொகையினையும் மேற்படி சொத்துவரியுடன் சேர்த்து உரிய தவணைகளில் வசூலிக்கவும்.

இவ்வாறு நிர்ணயிக்கப்படும் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை 10 சதவீதம் உயர்வு செய்யப்படும் எனவும், புதிய உபவிதிகள் நடைமுறைப்படுத்திடவும் திருத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் முன் பண விகிதங்களுக்கும்.மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

840-ன் தொடர்ச்சி

**அலுவலகக் குறிப்பு :**

1) மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்
2) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், சென்னை அவர்களது 13-01-2020 ஆம் தேதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அம்ரூத் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (எ.டி.பி) மற்ற திட்ட வழிகாட்டுதல்கள் நடைமுறைப்படுத்திட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மேற்காண் புதிய குடிநீர் உபவிதிகள் திருத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் முன்பண விபரங்கள் ஆகியவற்றினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பொது அங்கீகாரம் பெற (GENERAL APPERANCE) கருத்துரு அனுப்பி உரிய நடைமுறை விகிதங்களின்படி நடவடிக்கை மேற்கொண்டு நடைமுறைப்படுத்திட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
4) இத்திட்டம் மத்திய மாநில அரசால் வழங்கப்படும் நிதி ஆதாரங்களின் அடிப்படையிலும், உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(இ1/595/2020)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-------

**841)** திருப்பூர் மாநகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியின் கீழ் Skid -Street Loader Vehicle With Backhole Attachment வாகனங்கள் 4 எண்ணிக்கையில் M/s. Marwell Enncon Tech Pvt. Ltd., Coimbatore நிறுவனத்தில் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனத்திற்கு பராமரிப்பு பணி மற்றும் ஆயில் சர்வீஸ் செய்ய முதல் தவணை 50 மணி நேரம் அல்லது 30 வது நாளிலும், இரண்டாம் தவணை 250 மணி நேரம் அல்லது 120 வது நாளிலும், மூன்றாவது தவணை 500 மணி நேரம் அல்லது 210 வது நாளிலும், நான்காவது தவணை 750 மணி நேரம் அல்லது 300 வது நாளிலும் மற்றும் ஐந்தாவது தவணை 1000 மணி அல்லது 365 வது நாளிலும் வாகனத்திற்கு ஆயில்கள் அனைத்தும் மாற்றம் செய்யப்பட்டு வாகன உதிரி பாகங்கள் மாற்றம் செய்து பராமரிப்பு செய்யப்பட்ட வேண்டும் என மேற்படி வாகன பராமரிப்பு கையேட்டில்தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்பதாலும் மேலும் வாகனத்தை தொய்வின்றி இயக்கும் பொருட்டு மேற்படி பணி மேற்கொள்ள அனுமதியும் மற்றும் இதற்கான உத்தேச செலவீனம் ரூ.7.30/- இலட்சத்திற்கும் திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 திருத்தப்பட்ட சட்டம் 101 உட்பிரிவு 2(பி)ன்படி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் பதிவு செய்யலாம். **(E1/6005/2018/H1)**

-----

## தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது

-------

**842)** 01.01.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதன் பேரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 22-10-2008ம் தேதிய 207 (நிலை)வது எண்ணிட்ட அரசாணையில் இம்மாநகராட்சிக்கு 4 உதவி செயற் பொறியாளர் பணியிடங்கள் அனுமதி அளிக்கப்பட்டது.

**842-ன் தொடர்ச்சி**

இம்மாநகராட்சியில் பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணியமைப்பின் கீழ் உதவி / இளம் பொறியாளர்களாக பணிபுரிந்து வருபவர்களில், வகுப்பு-II தொகுதி I வகை 1 உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்க இவ்வலுவலக ந.க.எண்.சி1/6226/2018ம் எண்ணிட்ட 07.01.2019ம் தேதிய செயல்முறைகள் வாயிலாக தற்காலிக பணி மூப்பு பட்டியல் வெளியிடப்பட்டு ஆட்சேபணை ஏதுமிருப்பின், எழுத்து மூலம் அளிக்க தெரிவிக்கப்பட்டு பெறப்பட்ட ஆட்சேபணைகள் மற்றும் கோரிக்கைகள் ஏற்று கொள்ளப்பட்டு இவ்வலுவலக ந.க.எண்.சி1/6226/2018ம் எண்ணிட்ட 06.01.2020ம் தேதிய செயல்முறைகள் வாயிலாக முதுநிலை பட்டியல் இறுதி செய்து உத்திரவிடப்பட்டது.

அதன் பின்னர் இறுதி முதுநிலை பட்டியலில் இடம் பெற்றோரில் உதவி செயற் பொறியாளர் பணியிடத்திற்கு தகுதி பெற்றவர்களின் தேர்ந்த பெயர் பட்டியல் (Panel List) இவ்வலுவலக ந.க.எண்.சி1/6226/2018ம் எண்ணிட்ட 23.01.2020ம் தேதிய செயல்முறைகள் வாயிலாக வெளியிடப்பட்டது. மேற்படி தேர்ந்தோர் பட்டியலில் வ.எண்.1 ல் உள்ள திரு.எஸ்.சுப்ரமணி உதவி பொறியர் பதவி உயர்வு பெற தகுதி பெற்றுள்ளதால் உதவி செயற் பொறியாளர் பணியிடத்தில் அன்னார் பணியேற்கும் நாள் முதல் 56100-177500 என்கிற ஊதிய ஏற்ற முறையில் பதவி உயர்வு வழங்கவும், அரசின் உறுதியாக்கம் பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1996ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகளின் கீழ் பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணிவிதிகளில் உதவி / இளம் பொறியாளர்களாக பணிபுரிந்து வருபவர்களில் தகுதி வாய்ந்தவரை உதவி செயற் பொறியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்ய வேண்டும் அதன்படி உதவி / இளம் பொறியாளர்களுக்கான தேர்ந்த பெயர் பட்டியலில் வரிசை எண் 1ல் உள்ள திரு.எஸ்.சுப்ரமணி என்பவர் உதவி செயற் பொறியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற தகுதியானவர். எனவே திரு.எஸ்.சுப்ரமணி உதவி பொறியாளருக்கு உதவி செயற் பொறியாளர் பணியிடத்திற்கு 56100-177500 என்கிற ஊதிய ஏற்ற முறையில் பதவி உயர்வு வழங்கவும், பணியேற்கும் நாளிலிருந்து அரசின் உறுதியாக்கம் பெறவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(சி1/6226/2018)**

----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-------

**843)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட நான்கு மண்டலங்களில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தின் மூலம் சுமார் 135கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டக் குழாய்கள் அமைக்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நான்கு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீரேற்று நிலையங்களை (Pumping Station) புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள், வீட்டு இணைப்புகளில் மற்றும் பாதாள சாக்கடை புதை குழி (UGD Manhole)களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்யும் பணிகள் மற்றும் 7இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறு நீரேற்று நிலையங்களில் (Lifting Stations) மின்மோட்டார்களை இயக்கி பராமரித்தல் பணிகளை மாநகராட்சியின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**843-ன் தொடர்ச்சி**

இந்நிலையில் மேற்கண்ட பராமரிப்பு பணிகளுக்கு ஒப்பந்ததாரரால் பயன்படுத்தப்படும் மாநகராட்சி வாகனங்களுக்கு கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

| S.No | Name of the Vehicles | No of Vehicles | Rent per day/ Each |
|---|---|---|---|
| 1 | Jet Rodding Vehicles | 3 | Rs.1000/- |
| 2 | Compact Jetting Machine | 1 | Rs.500/- |
| 3 | Desiliting Machines | 2 | Rs.500/- |

பட்டியலில் கண்டுள்ள விபரப்படி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளுக்கு ஒப்பந்ததாரரால் பயன்படுத்தப்படும் மாநகராட்சி வாகனத்தின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப தினசரி வாகன வாடகையாக வசூல் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :அனுமதிக்கலாம். **(E3/7197/2019)**

----

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

-------

**844)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-1க்குட்பட்ட8,9,10 மற்றும் 13 வார்டு பகுதிகளில் 24382.08மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தில் வீடுகளில் தினசரி சேகரமாகும் மனித கழிவுகள், சமையலறை கழிவுநீர் மற்றும் குளியலறை கழிவுநீர், தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் மனித கழிவுகள் ஆகியவை நேரடியாக இணைக்கப்பட்டு Pumping செய்யப்பட்டு சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நான்கு Pumping Stations மற்றும் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினர் (NTADCL) மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள், வீட்டு இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை Man hole-களில் ஏற்படும் அடைப்பு சரி செய்தல், Lifting Station-களில் மின்மோட்டார்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்தல் போன்ற பணிகளை மாநகராட்சியின் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் (O&M) பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி அதன் அடிப்படையில் பராமரிப்பு செய்ய ஒதுக்கப்பட்ட காலம் முடிவுற்ற நிலையில் மேற்படி பணிகளை துறையின் மூலம் மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லை என்பதினால் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒரு ஆண்டிற்கு மண்டலம் எண்-1க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ள நடப்பு 2019-2020ஆம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியல் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தற்காலிக பணியாளர்களின் தினக்கூலி அடிப்படையில் ரூ.39,51,500/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச செலவினத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம். **(E3/7454/2019)**

----

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

-------

**845)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-2க்குட்பட்ட 23,24,25,26மற்றும் 27 வார்டு பகுதிகளில் 44143.00மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தில் வீடுகளில் தினசரி சேகரமாகும் மனித கழிவுகள், சமையலறை கழிவுநீர் மற்றும் குளியலறை கழிவுநீர், தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் மனித கழிவுகள் ஆகியவை நேரடியாக இணைக்கப்பட்டு Pumping செய்யப்பட்டு சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படுகிறது.

மேலும் ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (IHSDP) பாதாள சாக்கடை திட்டம் வார்டு எண்-23 மற்றும் 27 வார்டுகளில் அமைக்கப்பட்டு மேற்கண்ட இரு பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள Lifting Station-களிலிருந்து கழிவுநீர் Pumping செய்யப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நான்கு Pumping Stations மற்றும் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினர் (NTADCL) மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள், வீட்டு இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை Man hole-களில் ஏற்படும் அடைப்பு சரி செய்தல், Lifting Station-களில் மின்மோட்டார்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்தல் போன்ற பணிகளை மாநகராட்சியின் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் (O&M) பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி அதன் அடிப்படையில் பராமரிப்பு செய்ய ஒதுக்கப்பட்ட காலம் முடிவுற்ற நிலையில் மேற்படி பணிகளை துறையின் மூலம் மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லை என்பதினால் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒரு ஆண்டிற்கு மண்டலம் எண்-2க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ள நடப்பு 2019-2020ஆம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியல் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தற்காலிக பணியாளர்களின் தினக்கூலி அடிப்படையில் ரூ.49,81,500க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச செலவினத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதிக்கலாம். **(E3/7455/2019)**

----

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

-------

**846)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-3க்குட்பட்ட 31,32,42,43,44மற்றும் 45 வார்டு பகுதிகளில் 34869.90மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. மேலும் தாராபுரம் சாலையில் (சங்கிலிப்பள்ளம்) Lifting Station அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வீடுகளில் தினசரி சேகரமாகும் மனித கழிவுகள், சமையலறை கழிவுநீர் மற்றும் குளியலறை கழிவுநீர், தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் மனித கழிவுகள் ஆகியவை நேரடியாக இணைக்கப்பட்டு Pumping செய்யப்பட்டு சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படுகிறது.

மேலும் ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (IHSDP) பாதாள சாக்கடை திட்டம் வார்டு எண்-32ல் ஆதிதிராவிடர் காலனியில் அமைக்கப்பட்டு மேற்கண்ட இரு பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள Lifting Station-களிலிருந்து கழிவுநீர் Pumping செய்யப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது.

**846-ன் தொடர்ச்சி**

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நான்கு Pumping Stations மற்றும் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினர் (NTADCL) மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள், வீட்டு இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை Man hole-களில் ஏற்படும் அடைப்பு சரி செய்தல், Lifting Station-களில் மின்மோட்டார்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்தல் போன்ற பணிகளை மாநகராட்சியின் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் (O&M) பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி அதன் அடிப்படையில் பராமரிப்பு செய்ய ஒதுக்கப்பட்ட காலம் முடிவுற்ற நிலையில் மேற்படி பணிகளை துறையின் மூலம் மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லை என்பதினால் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒரு ஆண்டிற்கு மண்டலம் எண்-3க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ள நடப்பு 2019-2020ஆம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியல் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தற்காலிக பணியாளர்களின் தினக்கூலி அடிப்படையில் ரூ.35,82,000க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச செலவினத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அனுமதிக்கலாம். **(E3/7456/2019)**

----

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

-------

**847)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-4க்குட்பட்ட 46,47,48,49,51மற்றும் 56 வார்டு பகுதிகளில் 27872.50மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. மேலும் வார்டு எண்-47ல் காலேஜ் ரோட்டில் Lifting Station அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வீடுகளில் தினசரி சேகரமாகும் மனித கழிவுகள், சமையலறை கழிவுநீர் மற்றும் குளியலறை கழிவுநீர், தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் மனித கழிவுகள் ஆகியவை நேரடியாக இணைக்கப்பட்டு Pumping செய்யப்பட்டு சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படுகிறது.

மேலும் ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (IHSDP) பாதாள சாக்கடை திட்டம் வார்டு எண்-56ல் கே.வி.ஆர் நகர் மற்றும் வார்டு எண்-46ல் சின்னான் நகர் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு மேற்கண்ட மூன்று பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள Lifting Station-களிலிருந்து கழிவுநீர் Pumping செய்யப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நான்கு Pumping Stations மற்றும் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினர் (NTADCL) மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள், வீட்டு இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை Man hole-களில் ஏற்படும் அடைப்பு சரி செய்தல், Lifting Station-களில் மின்மோட்டார்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்தல் போன்ற பணிகளை மாநகராட்சியின் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் (O&M) பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி அதன் அடிப்படையில் பராமரிப்பு செய்ய ஒதுக்கப்பட்ட காலம் முடிவுற்ற நிலையில் மேற்படி பணிகளை துறையின் மூலம் மேற்கொள்ள போதுமான பணியாளர்கள்

**847-ன் தொடர்ச்சி**

இல்லை என்பதினால் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒரு ஆண்டிற்கு மண்டலம் எண்-4க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ள நடப்பு 2019-2020ஆம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியல் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தற்காலிக பணியாளர்களின் தினக்கூலி அடிப்படையில் ரூ.42,54,500க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச செலவினத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம். **(E3/7457/2019)**

-----

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

-------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.